# செந்தமிழ் இறைவன்

# செவ்வேள் முருகன்

நசிகேதன்



ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்

# பொருளடக்கம்


1. திருமுருகன் என்பவன் யார்? ........................ 9
2. முருகன் என்றால் என்ன பொருள்? ............ 11
3. கௌமார சமயமும் ஸ்ரீ குமரன் வழிபாடும் ... 13
4. திருமுருகன் திருத்தோற்றம் ...................... 15
5. நவ வீரபாகுத் தேவர்கள் ............................ 18
6. திருமுருகனும் ஸ்ரீ சோமாஸ்கந்தர் என்ற சிவமூர்த்தியும் ........................................ 19
7. திருமுருகனின் போக, யோக, வேக மூர்த்தங்கள் ............................................... 23
8. திருமுருகனின் திருவடிவங்கள் .................. 25
9. திருமுருகனின் அருவ, உருவ, அருவுருவ வழிபாடுகள் .............................. 28
10. மண்ணில் இறங்கிவந்த மால்மருகன் ........ 30
11. செந்தமிழ் மொழியும் செவ்வேள் முருகனும் ...................................... 32
12. தமிழ்மொழியும் தமிழாகர மூர்த்தி முருகனும் ......................... 35
13. செந்தமிழ் இலக்கியங்களில் செவ்வேள் ... 38
14. குறிஞ்சித் தலைவன் குமரவேள் முருகன் .. 42
15. கூத்தாடும் குமரப் பெருமான் ....................... 44
16. திருமுருகனின் அறுபடை வீடுகள் ............ 46
17. திருப்பரங்குன்றமும் ஸ்ரீ தெய்வயானை மணாளனும் ........................................... 49
18. திருச்செந்தூரும் ஸ்ரீ சூரசம்ஹார மூர்த்தியும் ........................ 54
19. திருவாவினங்குடி குழந்தைவேலனும் பழனி ஸ்ரீ பால தண்டாயுதபாணியும் ..................... 57
20. பழனி நவபாஷாண முருகன் சிலையின் ரகசியம் ........................ 61
21. திருவேரகம் எனும் சுவாமிமலையும் ஸ்ரீ சுவாமிநாத சுவாமியும் ........................ 65
22. குன்றுதோறாடல் திருத்தலங்களும் குமரனும் ...................... 68
23. திருத்தணிகை மலையும் ஸ்ரீ ஞானசக்திதரனும் ....................................... 70
24. பழமுதிர்சோலை அழகனும் அழகர்மலை கள்ளழகனும் ............................................... 72
25. தெய்வயானைக்கொரு தனிஸ்தலம் கந்தன் குடி .............................................. 76
26. வள்ளி மலையும் ஸ்ரீ வள்ளி கல்யாணமூர்த்தியும் ................................... 78
27. வள்ளிநாயகிக்கு ஒரு தனி ஸ்தலம் வள்ளியூர் ............................................... 82
28. திருமுருகனின் அருள் தரும் விரத மகிமைகள் ............................................... 86
29. கார்த்திகை விரதம் ..................................... 92
30. செவ்வாய்க்கிழமை விரதம் ......................... 95
31. வெள்ளிக்கிழமை விரதம் ........................... 98
32. வைகாசி விசாகம் ........................................ 100
33. தைப்பூசம் ..................................................... 102
34. பங்குனி உத்திரம் ........................................ 105
35. திருமுருகனின் பனிரெண்டு ஆயுதங்கள் .. 108
36. வெற்றிவேல்! வீரவேல்!! ஞானவேல்!!! ..... 110
37. மயில் கொடி - சேவல் கொடி ஆண்டலைக்கொடி ................................... 113
38. மயில் வாகனம் ஏறிய மாவீரன் ................. 116
39. ஆட்டு வாகனம் ஏறிய அழகன் ................. 119
40. யானை வாகனம் ஏறிய ஞானபண்டிதன் . 121
41. சிங்க வாகனம் ஏறிய செவ்வேள் ............. 123
42. குதிரை வாகனம் ஏறிய குமரன் ............... 125
43. மகர வாகனம் ஏறிய மால்மருகன் ............ 127
44. பால்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக்காவடி ........................................... 129
45. பஞ்சாமிர்தம் ................................................ 132
46. முடி காணிக்கை .......................................... 134
47. அகத்தியருக்கு அருளிய ஆறுமுகன் ...... 137
48. நக்கீரருக்கு அருளிய நாதன் ..................... 139
49. அருணகிரிநாதருக்கு அருளிய அமலன் . 142
50. காஞ்சி - குமரக்கோட்டமும் ஸ்ரீ கச்சியப்பரின் கந்தபுராணமும் ...................................... 144
51. ஔவைப் பிராட்டிக்கு அருளிய ஆபாலன் ................................................ 147
52. ஸ்ரீ குமர குருபரர்க்கு அருளிய குமரன் ... 152
53. முருகப்பெருமான் ஆலயத்தில் சண்டிகேஸ்வரர் ....................................... 154
54. ஆறு தன்மைகள் கொண்டவன் ஆறுமுகன் ................................................ 155
55. சப்த மாதர்களில் குமரசக்தியான ஸ்ரீ கௌமாரி தேவி ........................................ 156
56. சடாரி வைக்கப்படும் சண்முகன் கோயில் 157
57. ஆறும் ஆறுமுகனும் ................................. 158

# 1

# திருமுருகன் என்பவன் யார்?

திருமுருகன் என்று நம்மால் அழைக்கப்படும் இத்தேவன் பிரம்மனின் மானச புத்ரர்களில் ஒருவரான சனற்குமாரனின் அம்சமாய்த் தோன்றியவன். **சிவபெருமானின்** நெற்றிவிழிக் கனலிலிருந்து அவதரித்த **சிவக்குமரன்**, சக்தி **பார்வதிதேவி** சேர்த்தெடுத்து ஞானப்பாலுட்டி வளர்த்த **சக்திமைந்தன்**, விநாயகப்பெருமானின் இளைய சகோதரன், **ஹரிஹரபுத்திரன் சாஸ்த்தா ஐயனார்** - என்றழைக்கப்படும் **ஐயப்ப சுவாமியின்** அண்ணன். **திருமாலின்** மருமகன், **இந்திரனின்** மாப்பிள்ளை, **தேவயானையெனும்** தேவியின் கணவன், **வள்ளிக்குற மகளின்** காதலன், **வீரபாகு** முதலான **நவ வீரவாகுத்தேவர்கள்** ஒன்பதின்மரின் தோழன், **தேவர்களுக்கு** இன்னல்கள் விளைத்த **தாரகாசூரன் சிங்கமுகன் சூரபதுமன்** முதலான அசுரர்களின் எதிரி, **அகத்திய முனிவருக்கே** தமிழிலக்கணம் போதித்த முதல் தமிழ்ப்பேராசிரியன், பாண்டி நாட்டில் முதல் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த பெருந் தமிழறிஞன்.



**ஔவைப்பிராட்டிக்கு** தத்துவ ஞானத்தை நாவல்கனி மூலம் போதித்த நற்குரு, **நக்கீரர், அருணகிரியார், குமரகுருபரர், கச்சியப்பசிவசாரியார்** போன்ற பற்பல ஞானி

போர்களத்தில் கொற்றவை என்ற காளிதேவிக்கு அளிக்கப் படும் விருந்துப் படையலான பலியிடுதல் எனும் சடங்கிற்கும் முருகு என்ற பெயர் உள்ளது குறிப்பிடத்தக்கது. முருகு முருகன் என்ற பெயர் சமஸ்கிருத மொழியில் கையாளப் படவில்லை என்றாலும் இந்தி மொழி உள்ளிட்ட வேறு சில வடநாட்டு மொழிகளுள் உள்ள முருகா, முருகி என்ற சொல் திருமுருகனின் சின்னங்களில் ஒன்றாகிய சேவலை குறிப்பிடு கின்றது. அதனாலென்ன சேவலும் முருகனோடு தொடர் புடையதுதானே. அதனால் இச்சொல் தென்மொழிகளுள் தலைசிறந்ததான தமிழ்மொழியிலிருந்து வடக்கில் உள்ள இம் மொழிகளுக்குச் சென்றிருக்கவும் வாய்ப்பு உள்ளது. எனவே முருகனை, அழகனை, இளமையானவனை, வலிமை நிறைந்த ஆண்மகனை, தொன்று தொட்டே துதிக்கப்படும் தூயவனை, வேலவனை, சேவல் கொடியோனை நாம் வாயினால் பாடி மனதினால் சிந்தித்து உடற்கருவிகளின் செயலினால் தொண்டு செய்து வழிபாடு புரிவோமாக. அவனருள் பெறுவோமாக.


## ஆறு முகங்கள் ஆறுசெயல்கள் ஆறு ஸ்தலங்கள்

| அருணகிரிநாதரின் பாடல் வரிகள் | முகம் | ஸ்தலம் |
|---|---|---|
| ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே | மழலைமுகம் | கைலாசம் |
| ஈசருடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்றே | ஞானமுகம் | சுவாமிமலை |
| கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே | அருள்முகம் | பழனிமலை வைத்தீஸ்வரன் கோயில் |
| குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே | வீரமுகம் | சிக்கல் |
| மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே | வெற்றிமுகம் | திருச்செந்தூர் |
| வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே | காதல்முகம் | வள்ளிமலை திருத்தணிகை |

# 3

# கௌமார சமயமும் ஸ்ரீ குமரன் வழிபாடும்

நம் இந்துமதம் "ஷண்மதம்" எனும் **ஆறு சமயங்களை** உட்பிரிவாகக் கொண்டது. அவை **சௌரம்** எனும் "சூரிய வழிபாடு", **காணாபத்யம்** எனும் "கணபதி வழிபாடு", **சைவம்** எனும் "சிவவழிபாடு", **வைஷ்ணவம்** எனும் "விஷ்ணு வழிபாடு," **சாக்தம்** எனும் "சக்தி வழிபாடு", **கௌமாரம்** எனும் "குமர வழிபாடு" எனும் ஆறு வழிபாட்டுச் சமயங்கள் ஆகும். இவற்றில் நிறைவாக வரும் **கௌமாரம்** எனும் **குமரன் வழிபாட்டுச்சமயமே** நம் செந்தமிழ் நாட்டின் கண் சிறந்து விளங்கும் **திருமுருகன் வழிபாடாகும்.**



"பிரம்மதேவனின்" மானச புத்திரர்களில் ஒருவரும், "ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியின்" நான்கு சீடர்களில் ஒருவருமான சனற்குமாரரே திருமுருகனாக அவதாரம் செய்தார். இவர் என்றும் இளமையோடு இருப்பவர் ஆதலின் **குமாரர்** எனப்படுவார். **குமார** என்ற சொல்லுக்கு இளமை, அழகு, எதிரிகளை அழிப்பவர், சகல செல்வங்களும் வழங்குபவர், பிரம்மச்சாரியாக இருப்பவர், ஆன்மாக்களிடம் உள்ள **பஞ்சமலங்களை** நீக்குபவர் என்று சில பொருள்கள் உண்டு. அதனால்தான் இந்த அனைத்து தன்மைகளும் ஸ்ரீகுமரப்பெருமானிடம் உள்ளன. அதனால்தான் **குமரகோட்டம்** என்றும் **குமாரவயலூர்** என்றும் கந்தகுமாரன் என்றும் **சந்திரகுமாரகிரி,** குமாரக்கோவில், [illegible] என்றும், **குமாரபுரம், கௌமாரம்** என்றும் **குமரன்** பெயரில் பல்வேறு திருத்தலங்கள் உள்ளன.

இந்த குமரப்பெருமானை வழிபடும் "பக்தர்கள்" **கௌமாரர்கள்** [illegible] சைவத்திற்கு **சைவ மடாலயங்கள்** இருப்பது


போலவே, **வைஷ்ணவத்திற்கு வைணவ மடாலயங்கள்** உள்ளது போலவே, இந்த குமர வழிபாட்டுச் சமயத்திற்கும் சில **கௌமார மடாலயங்கள்** உள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சிவனுக்குரிய **ஷடாக்ஷரம் ஓம்நமசிவய**. இதுபோலவே **குமரனுக்குரிய** "ஷடாக்ஷரம்" **சரவணபவ** என்பதாகும். அது மட்டுமல்ல **குமாராய நம** என்ற மந்திரமும் குமரனின் **ஷடாக்ஷரம்** தான். குமரனின் உருவவழிபாட்டு இலக்கணங்களையும், அதற்குறிய யந்திரம், மந்திரம் மற்றும் சிலா அமைப்பு முறைகளையும், பிரதிஷ்டா விதிகளையும் கூறும் "வடமொழி நூலுக்கே" **குமாரதந்திரம்** என்றுதான் பெயர். இது ஒரு **கௌமார சமய நூலாகும்.**

ஓ

## 28 சிவலிங்கங்கள் உள்ள சைவாகமக் கோயில்

வேதத்திலிருந்து வெளிப்பட்டவை சைவாகமங்கள். இவை மொத்தம் 28. இந்த சைவாகமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு- சிவலிங்கம் என்று 28 ஆகமங்களையும் இருபத்தெட்டு சிவலிங்கங்களாக வைத்து முருகன் வழிபட்ட சிவஸ்தலம் ஒன்றும் உள்ளது. அதுதான் நடுநாட்டுப்பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் இருபத்தி இரண்டினுள் ஒன்றாக விளங்கும் **விருத்தாசலம்** என்ற **திருமுதுகுன்றம்**. இது சென்னையில் இருந்து திருச்சி சாலையில் உளுந்தூர் பேட்டைக்கு அருகில் உள்ளது. **இங்கே 28 ஆகமங்களும் சிவலிங்க வடிவில் உள்ளன.** சைவர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக சென்று தரிசிக்க வேண்டிய பெருஞ் சிவாலயம் இது. முக்கியமாக **ஆதிசைவர், குருக்கள்** என்றழைக்கப்படும் **சிவாசாரியார்கள்** இத்தலத்தை நிச்சயம் தரிசித்தே தீரவேண்டும். இத்தரிசனம் ஆகமக் கல்வியில் அவர்களை தலைசிறந்த ஞானவான்களாக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



# 4

# திருமுருகனின் திருத்தோற்றம்

ஒரு சமயம் சூரபதுமன் முதலான அசுர சேனைகளின் தாக்குதலுக்கு ஆளான தேவர்களும் ரிஷிகளும் ஒன்றுகூடி திருக்கயிலாய மலைக்கு ஓடோடி வந்தனர். அங்கு உமா தேவியோடு உறையும் சிவபெருமானிடம் பணிந்து அபய மளிக்கும்படி வேண்டினர். அவரும் அஞ்சேல் என்று அபய மளித்து தக்க உபாயம் செய்து அவர்களைக் காத்தருளுவதாக வாக்குறுதி அளித்தார்.

அதற்கான காலமும் கனிந்து வந்தது. சிவபெருமான் **ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம்** என்ற தமது ஐந்து திருமுகங் களோடு சக்தி தேவியின் அம்சமான **அதோ** முகம் என்ற **உள்முகத்தையும்** கூட்டி ஆறு திருமுகங்கள் கொண்டார். அவற்றில் **சந்திர விழி, சூரியவிழி, அக்கினிவிழி** என்று முகத் திற்கு மூன்று விழிகள் வீதம் ஆறுதிருமுகங் களுக்கும் மூவாறு பதினெட்டு (3 x 6 = 18) அருள் விழிகள் கொண்டு அமைந்தார்.



மேற்கண்டவற்றுள் நடுவில் ஒளிரும் **நெற்றிக்கண்**களான அக்கினிமயமான நேத்திரங்கள் ஆறிலிருந்தும் **ஆறு ஜோதிகளை** உருவாக்கினார். அவை உலகெங்கிலும் படர்ந்து சென்று அனைவரையும் தகித்தது, உலகமே அந்த ஒளியின் வெம்மை தாங்காமல் கிடு கிடுத்தது. தேவர்களும், ரிஷிகளும் அங்குமிங்கும் ஓடினர். அந்த சுடரின் வெம்மை தாளாமல் உமாதேவியும் அங்குமிங்கும் ஓடினாள். (அப்போது அவள் பாத சலங்கையி லிருந்து விழுந்து சிதறிய நவமணிகளிலிருந்து தான் **நவசக்தி களும்** அவர்களின் கர்ப்பத்திலிருந்து **நவவீரவாகுத் தேவர்களும்** தோன்றி வெளிப்பட்டனர்) இதைக் கண்டு புன்னகைத்த சிவபெருமான் அவை ஆறு சுடர்களையும் ஒன்றாக எடுத்து

அங்கிருந்த **வாயுதேவன்** கைகளில் தந்தார். வாயுதேவனாலும் அந்த உஷ்ணத்தை தாங்க முடியவில்லை அவர் தம் அருகிலிருந்த **அக்னிபகவான்** கைகளில் அதனை வைத்தார். அக்னிதேவனாலும் அதன் வெம்மையை தாள முடியவில்லை. அவர் அச்சுடர்களை அருகிலிருந்த **கங்கை நதியில்** இட்டார். கங்காதேவியாலும் அச்சுடர்களின் தகிப்பை தாங்கமுடியவில்லை. அவள் அவற்றை தம் கரையில் தருப்பை எனும் நாணல்கள் முளைத்து சேறும் சகதியுமாக இருந்த **சரவணப்பொய்கையில்** இட்டாள். அங்கே அச்சுடர்கள் ஆறும் **ஆறுதாமரை மலர்களில்** விழுந்து ஆறு குழந்தைகளாக உருப்பெற்று அழுதன. அழகொளிரும் மேனியொடு மன்மதன் போலவும் ஜகத் ஜோதியான உதயகால சூரியன் போலவும், செம்மேனி கொண்ட அந்த ஆறு குழந்தைகளைக்கண்டு தேவர்களும் ரிஷிகளும் முனிகணங்களும் பெரும் ஆரவாரம் புரிந்தனர். அக்குழந்தைகளின் அழுகுரல் கேட்டு அங்கிருந்த அனைவர் உள்ளங்களும் இளகின.

ஒருசமயம் சப்தரிஷிகளில் **வசிஷ்டர்** தவிர **அத்ரி, காஸ்யபர், கௌதமர், பாரத்வாஜர், விஸ்வாமித்ரர், ஜமதக்னி** எனும் ஆறு மகரிஷிகளின் பத்தினிமார்களும் **கிருத்திகை** முதலான ஆறு **கார்த்திகைப் பெண்களாக** நட்சத்திர பதவி அடைந்திருந்தனர். அந்த ஆறு கார்த்திகைப் பெண்களும் இக்குழந்தைகளின் அழுகுரல் கேட்டு அங்கே வந்து அக்குழவிகள் ஆறையும் எடுத்தணைத்து உச்சிமுகர்ந்து, முத்தமழை பொழிந்து தமது திருத்தனங்களால் அமுதப்பால் ஊட்டி தாலாட்டி மகிழ்ந்தனர். அறுமுகனுக்கே திருமுலைப்பால் ஊட்டி வளர்த்து **முலைத்தாய்** என்ற அந்தஸ்த்தினை அடைந்ததால் சிவபெருமான் அவர்கள் அறுவரையும் ஆசீர்வதித்து இக்குழவிகள் அனைவரும் ஒன்றாகியபின்பு உங்கள் பெயராலும் **கார்த்திகேயன்** என் றழைக்கப்படுவான். உங்கள் நட்சத்திரத்தன்று உலகமக்களால் இவன் வணங்கப்படுவான், அத்தகைய பெருமைகளை யாம் உங்களுக்கு வரமாக அருளினோம் என்று திருவாய் மலர்ந் தருளினார். பின்பு தம் அருகிலிருந்த தேவிக்கு அக்குழந்தை களை காட்டியருளி ஜாடை புரிந்தார்.

குழந்தைகளை தூக்கியணைக்கவே ஆவலாய் காத்திருந்த **உமாதேவி** சிவன் கண்ணசைவு கிடைத்ததும் ஓடோடி சென்று ஆறு குழந்தைகளையும் தம் இருகரங்களால் வாரியணைத்தாள்.

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: http://www.ebooks2go.com**